தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1987, மார்ச் 24, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 10, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு-2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி'.

கொடை, அருளி, செங்கோல் முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

1. வினாக்கள்-விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 141 மற்றும் 142 மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளி வைக்கப்பெறுகின்றன.

நீர்ப்போட்டி விளையாட்டுகள்

143—(*வினா எண் 3013) திரு. க. சேர்லைராசு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்போட்டி விளையாட்டுக்களை ஊக்குவிக்கிற உத்தேசம் அரசிற்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னை மாமல்லபுரம் செல்லும் வழியில் முத்துக்காட்டில் முதற்கட்ட பணியாக விண்ட் சர்பிங் என்ற நீர்ப்போட்டி விளையாட்டை 1984 ஆகஸ்ட் முதல் அறிமுகப்படுத்தி, இளைஞர்களுக்கு இலவசமாக பயிற்சியும் அளித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகமண்டலம், முத்துக்காடு முதலிய இடங்களில் படகுப்போட்டிகளை நடத்தியுள்ளது. 1985-ல் அகில இந்திய படகுப்போட்டி முத்துக்காட்டில் நடந்தது. கூடிய விரைவில் ஆசிய, உலக படகுப்போட்டிகள் முத்துக்காட்டில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

பாலர் பள்ளிகளை நெறிப்படுத்தல்

144—(* வினா எண் 3016) **திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாலர் பள்ளிகளை நெறிப்படுத்தும் சட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாலர் பள்ளிகளை முறைப் படுத்தும் செயற்குறிப்பு உள்ளது என்று சொன்னார்கள். 23—1—1968-ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த நேரத்தில் தமிழகத்தில், தமிழ் பயிற்சி மொழியாகவும் பாட மொழியாகவும் எல்லாக் கல்வி நிலையங்களிலும் கொண்டு வருவதற்கு ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே முயற்சி செய்யப்படும் என்று ஒரு தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றியிருக்கிறது. அது ஐந்து ஆண்டுகள் கழிந்தபிறகும் நிறைவேறவில்லையென்று சொன்னாலும் செயற்குறிப்பிலே இப்பொழுது இருப்பதிலே யாவது அவர்கள் உடனடியாக எல்லாக் கல்வி நிலையங்களிலும் பாலர் பள்ளி என்று சொல்கின்றபொழுது, 'டாடி' 'மம்மி'